# IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.

## MCOP.NO. 412/ 2024

Deposition of RW - 1 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 06.07.2026 in accordant with provisions of XLIV of 1989.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுரேஷ் | Age | : | |
| Father's Name | : | பொன்னுதுரை | Village | : | |
| Calling | : | | Taluk | : | |

**முதல் விசாரணை**

நான் எதிர்மனுதாரர் போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிகின்றேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சம்பந்தமாக மாயனூர் காவல்நிலையத்தில் என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்வதற்கு நான் நடவடிக்கை எடுக்கவில்லை. விபத்து நடைபெற்ற சாலை கிழமேல்சாலை என்றால் எனக்கு நினைவில்லை. இரண்டு பேருந்துகள் செல்லக்கூடிய அளவு அகலமுள்ள சாலை என்றால் சரிதான். இருசக்கர வாகனம் செல்வதற்கு தனியாக சாலை ஓரத்தில் வழி உள்ளது என்றால் அவ்வாறு இல்லை. நான் தான் பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. ஆகையால்தான் நான் என் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கை ரத்து செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய அஜாக்கிரதையால்தான் விபத்து ஏற்பட்டது என்றும், எனவே எதிர்மனுதாரர் போக்குவரத்து கழகம் மனுதாரருக்கு இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |